# இம்மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மேற்கொள்ளவுள்ள மத்திய கிழக்கு விஜயத்தின் போது இஸ்ரேலுடனான உறவுகளை இயல்பு நிலைக்கு கொண்டுவர சவூதி அரேபியா திட்டம்

**லத்தீப் பாரூக்**

காலாகாலமாக இஸ்ரேலுடன் பேணி வரும் இரகசிய உறவுகளை சவூதி அரேபியா தற்போது பகிரங்கமாக முறைப்படி பேண முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. ஜூலை மாதமட் 13ம் திகதி முதல் 16ம் திகதி வரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மத்திய கிழக்கிற்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். அந்த விஜயத்தின் போது சவூதி - இஸ்ரேலுடனான உறவுகளை முறைப்படி பேணும் திட்டம் வெளிவரவுள்ளது.

சவூதி அரேபியாவிடம் இருந்து இதுவொன்றும் எதிர்ப்பார்க்கப்படாத ஒரு விடயம் அல்ல. காரணம் நீண்ட காலமாக அது இஸ்ரேலுடன் இரகசிய உறவுகளைப் பேணி வருகின்றது. முஸ்லிம் நாடுகளுக்கு எதிரான அமெரிக்க மற்றும் ஐரோப்பிய கூட்டு சதிகளிலும் சவூதி அரேபியா தொடர்ச்சியாகப் பங்கேற்று வந்துள்ளது. தனது இஸ்ரேலிய, ஐரோப்பிய மற்றும் அமெரிக்க சகாக்களின் நன்மைக்காக சவூதி அரேபியாவே பல முஸ்லிம் நாடுகள் மீது தாக்குதல்களை நடத்தியும் உள்ளது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். அந்த நாடுகளின் உள் கட்டமைப்புக்கள் பல நாசமாக்கப்பட்டுள்ளன.

ஏவ்வாறேனும் இஸ்ரேலுடனான உறவுகளை முறைப்படி அமுலுக்கு கொண்டு வருவது முன் கூட்டி கணிக்க முடியாத பல விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். ஏனெனில் சவூதி அரேபியா இஸ்லாத்தின் பூமி. உலக முஸ்லிம்கள் அனைவராலும் நேசிக்கப்படும் ஒரு பூமி. ஆனால் அங்குள்ள ஆட்சியாளர்கள் முதலாவது உலக மகா யுத்தத்தின் பின் முன்னாள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாத மற்றும் சியோனிய அதிகாரபீடத்தால் ஆட்சியில் அமர்த்தப்பட்டவர்கள். இவர்கள் தான் இன்று உலகளாவிய கண்டனங்கள் அனைத்தையும் மீறி உலகின் மிகவும் மோசமான அடக்குமுறை கொடுங்கோல் ஆட்சிhளர்களாக உள்ளனர். இவர்கள் எந்த வகையிலும் இஸ்லாத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

இஸ்லாத்தின் மூன்றாவது மிகப் புனித நகரமான ஜெரூஸலத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலை அங்கீகரிப்பது, பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இழைத்து வரும் முடிவற்ற கொடுமைகளை

அங்கீகரிப்பது என்பன பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. சவூதி அரசின் அதிருப்தியாளரும் ஊடகவியலாளருமான ஜமால் கஷோகி மிகக் கொடூரமான முறையில் துருக்கியில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்துக்குள் வைத்து கொல்லப்பட்ட பின் கவூதி அரேபியா உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட தனிமை படுத்தப்பட்டிருந்தது. அந்தத் தனிமையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக சவூதி அரேபிய ஆட்சி பீடம் இன்று கொடுக்கின்ற விலை தான் இஸ்ரேலுடனான உறவுகளில் இயல்பு நிலை.

2018 அக்டோபகர் 2இல் ஜமால் கஷோகி துருக்கியில் உள்ள சவூதி அரேபிய தூதரகத்துக்குள் வைத்து கதறக்கதற கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபை நடத்திய விசாரணையின் முடிவில் 2019ல் கஷோகியின் கொலை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனை என்று தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாண்டு மார்ச் மாதம் முடிக்குரிய இளவரசர் சல்மானின் உத்தரவின் கீழ் பாரிய அளவிலான மரண தண்டனை நிறைவேற்றம் என்ற பெயரில் 81 பேர் சவூதியில் கொல்லப்பட்டனர். சவூதி நீதித்துறையின் இலட்சனத்தை உலகுக்கு பறைசாற்றும் வகையில் இது அமைந்திருந்தது. இந்தப் பாதகச் செயல் இஸ்லாத்துக்கு முற்றிலும் முரணானதாகும். கஷோகி கொலைக்கோ அல்லது அதுபோன்ற வேறுவிதமான கொலைகளுக்கோ அல்லது குற்றச் செயல்களுக்கோ பொறுப்புக்கோருமாறு இளவரசரை வற்புறுத்துவதற்கு பதிலாக மேலைத்தேச அரசுகள் அவரை புடைசூழ்ந்து உற்சாகப்படுத்தி வருகின்றன.

மிகவும் தனிப்பட்ட விதத்தில் சவூதி அதிகாரிகள் இந்தப் பாரிய படுகொலைகளை நடத்தி முடித்துள்ளனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமை கூட சம்பந்தப்ப்ட்வர்களின் குடும்பத்தவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. முடிக்குரிய இளவரசராக இருந்து கொண்டு இந்தளவு அதிகாரத் துஷ்பிரயோகம் செய்யும் முஹம்மத் பின் சல்மான் அல்லது எம்பிஎஸ் தன்வசம் கொண்டுள்ள மட்டில்லா அதிகாரத்தை இது தெளிவுபடுத்தி நறிகின்றது. இனி அவர் அதிகாரபூர்வ அரசரானால் நிலைமை என்னவாகும் என்பதே எஞ்சியுள்ள கேள்வி.

றாபி பேர்க் என்பவர் பிபிஸியில் எழுத்தியுள்ள ஒரு அறிக்கையின் படி 2019ல் ஜோ பிடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில்

ஈடுபட்டிருந்த போது கஷோகியை கொன்றமைக்காக சவூதி அரேபியா மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சபதம் பூண்டார்

கஷோகியை கொலை செய்யும் திட்டத்துக்கான அங்கீகாரத்தை முடிக்குரிய இளவரசர் வழங்கி இருந்தார் என்பதை அமெரிக்க புலனாய்வு நிறுவனங்கள் அன்றே ஊர்ஜிதம் செய்திருந்தன. ஆனால் பிடன் பதவியேற்றதும் புதிய ஜனாதிபதி சவூதி அரேபியாவுடனான உறவுகளை மீள் அளவீடு செய்ய விரும்புவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது.




*அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன்*

அதன் பிறகு தான் சவூதியை வழிக்கு கொண்டு வந்து ஜமால் கஷோகி கொலைக் குற்றத்தால் ஏற்பட்டுள்ள தனிமைப்படுத்தலில் இருந்து விடுபடவேண்டுமானால் இஸ்ரேலுடன் முறைப்படியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை நோக்கி சவூதி நகர்த்தப்பட்டது. சியோனிஸத்தினதும் இஸ்ரேலினதும் தீவிர ஆதரவாளரான அமெரிக்க ஜனாதிபதிக்கு கிடைத்த மாபெரும் மகத்தான வெற்றி இதுவாகும்.

இந்த ஏற்பாடுகளின் ஒரு முன்னோடியாகத் தான் இளவரசர் சல்மான் அண்மையில் எகிப்துக்கும் விஜயம் செய்தார். பிராந்திய விஜயத்தின் முதற் கட்டமாக அங்கு சென்ற சல்மான் அதைத் தொடர்ந்து ஜோர்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார்.

துருக்கியடனான இருதரப்பு உறவுகளில் ஏற்பட்ட விரிசலை சீர் செய்யும் வகையில் இளவரசர் சல்மான் கடந்த மாதம் அங்காராவுக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்துக்கு ஐந்து தினங்கள் முன்பதாக 2022 ஜுலை 17ல் துருக்கி நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த ஜமால் கஷோகி கொலை வழக்கும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.





***இளவரசர் சல்மான் எகிப்திலும் துருக்கியிலும்***

ஆனால் இளவரசர் சல்மான் தான் தனது காதலர் கஷோகியைக் கொன்றவர் என்ற நிலைப்பாட்டில் கஷோகியின் காதலி ஹேடிஸ் சென்கிஸ் தொடர்ந்தும் உறுதியாக உள்ளார்.

லண்டனை தளமாகக் கொண்டு செயற்படும் மிடில் ஈஸ்ட் ஐ இன் தகவலின் படி முடிக்குரிய இளவரசர் இஸ்ரேலுடன் முழு அளவிலான உறவுகளை தொடங்க வேண்டும் அதற்கு பகரமாக அமெரிக்கா சவூதிக்கு அளித்துள்ள இராணுவ ரீதியான வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றும் என்று தெரிய வந்துள்ளது.

இந்தக் கடினமான சமன்பாட்டில் மிக முக்கியமாக இழக்கப்படுகின்ற ஒரு விடயம் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையிலான நீண்டகால சமாதானமாகும். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இழக்கப்பட்டு வரும் உயிர்களுக்காக அதிகபட்ச விலையாகவும் இது அமைந்துள்ளது.

சவூதியில் பிறந்து வளர்ந்து இப்போது பிரி;ட்டிஷ் பிரஜையாகவும் லண்டன் பொருளாதார மற்றும் அரசியல் விஞ்ஞானக் கல்லூரியில் வருகை தரும் விரிவுரையாளராகவும் உள்ள மதாவி அல் றஷீத் இதுபற்றிக் குறிப்பிடுகையில்



**மதாவி அல் றஷீத்**

வாஷிங்டனில் உள்ள தனது சிறப்புரிமைத் தன்மையை நிலை நிறுத்திக் கொள்வதற்கான பேரம் பேசலில் சவூதி அரேபியா இஸ்ரேலுடனான இயல்பு நிலை உறவை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றது. உக்ரேன் யுத்தம் உலக மட்டத்தில் அதிகரித்து வரும் சக்திவளப் பெருள்களின் விலை என்பனவற்றின் மத்தியில் சவூதி இளவரசர் சல்மான் பொருளாதார பலம் என்ற தன்னிலைப்பாட்டில் இருந்து பேரம் பேசுகின்றார், ஆனால் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அவர் பலமிழந்து நிற்கின்றார்.

இஸ்ரேலிய அதிகாரிகளுடன் அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ள பாரதூரமான, இரகசிய உயர் மட்டப் பேச்சுக்களின் அடிப்படையில் ஜோய் பிடன் றியாத் மண்ணில் காலடி எடுத்து வைத்த ஒரு சில மணிநேரத்தில் இஸ்ரேலுடனான தனது உறவுகளை முறைப்படி ஆரம்பிக்கும் அறிவித்தலை சவூதி அரேபியா வெளியிடக் கூடும் என்று தெரிய வந்துள்ளது.

சவூதி அரேபியாவிடம் இன்றைய நிலையில் மிகவும் சக்தி வாய்ந்த பொருளாதார ரீதியான வெளிநாட்டு நாணய பலம் உள்ளது. எரிபொருள் குறைபாடுகளுக்கு மத்தியிலும் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு மத்தியிலும் இந்நிலை காணப்படுகின்றது. சவூதி அரேபியாவுக்கு மிகவும் வேண்டப்படும் எண்ணெய் வளங்களில் இருந்து தான் முடிக்குரிய இளவரசர் தனது நிலையை ஸ்தாபிக்க முயல்கின்றார். அமெரிக்க நிர்வாகத்தின் மீது நெருக்குதலைத் தொடுக்க எண்ணெயை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்பதை அவர் நன்கு உணர்ந்துள்ளார். வாஷிங்டனில் தனது சொந்த பிரம்மையை புனர்நிர்மானம் செய்து கொள்ளவும், தனக்கு முழு அங்கீகாரம் வழங்கப்படாமல் தன் மீதான தெரிவு செய்யப்பட்ட ஈடுபாட்டு போக்கை மாற்றி அமைக்கவும் தனது பெற்றோலிய வளத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த முடியும் என்பதை முடிக்குரிய இளவரசர் நன்கு புரிந்து வைத்துள்ளார்.

உண்மையில் கடந்த காலங்களில் றியாத்-அமெரிக்க உறவுகள் கடினமான நிலைகளைக் கண்ட போது அவற்றை சீர் செய்ய பெற்றோல் ஒரு சாதனமாக அமைந்திருந்ததை காண முடிந்தது. அதேபோல் ரஷ்யாவுடனான போராட்டத்தை வெல்ல சவூதி அரெபியா பிரதான காரணியாக அமைந்துள்ளது என்பதை அமெரிக்க ஜனாதிபதி பிடனும் நன்கு புரிந்து வைத்துள்ளார். அதற்கு பகரமாக முடிக்குரிய இளவரசருக்கு வழங்கப்படும் வெகுமதிதான் அமெரிக்க ஜனாதிபதியின் சவூதி விஜயம். ஆனால் இந்த ஈவு இரக்கமற்ற சர்வாதிகாரியின் முன்னாள் தனது தோல்வியின் வெளிப்பாட்டைக் காட்டிக் கொள்ளவோ அல்லது அவர்

முன்னிலையில் தலைகுனிந்து நிற்கும் நிலையை ஏற்படுத்திக் கொள்ளவோ அமெரிக்க ஜனாதிபதி விரும்பவில்லை. அதற்கு ஈடாக அவர் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்புடன் தனது தாய் நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்பதே அவரின் திட்டம். அந்த அறிவிப்பு தான் சவூதி-இஸ்ரேல் இராஜதந்திர உறவுகள்.

இடையூரற்ற பிரசாரங்கள்

சவூதி ஆரேபியாவுக்கான தனது விஜயத்தை அமெரிக்க ஜனாதிபதி ரத்துச் செய்ய வேண்டும். கஷோகி கொலைக்காகவும் யெமன் மீதான தாக்குதல் உற்பட ஏனைய மனித உரிமை மீறல்களுக்காகவும் சவூதி இளவரசரைத் தண்டிக்க வேண்டும் என்று அமெரிக்காவில் பிரயோகிக்கப்பட்டு வரும் நெருக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் அமெரிக்க ஜனாதிபதி இந்த அறிவிப்பை தாராளமாகப் பயன்படுத்திக் கொள்வார்.

அதேபோல் சவூதி இளவரசின் நன்மதிப்பை நிலைநிறுத்த இஸ்ரேலும் முழு ஒத்துழைப்பை வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏற்கனவே வாஷிங்டனில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலின் தீவிர வலது சாரி பிரிவுகள் இந்த விடயத்தில் தமது பணியை முடுக்கி விட்டுள்ளன. தற்போது வாஷிங்டனில் சவூதி அரேபியாவின் மிகப் பெரிய பிரசார சக்தியாக மாறி இருப்பது இஸ்ரேல் தான் என்பது பெரும் வேடிக்கையாகும்.

இதேநேரம் பலஸ்தீனர்களின் உரிமைகளை குறைத்து மதிப்பிடாத விதத்தில் இஸ்ரேலுடன் இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை தனது உள்நாட்டு மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு நினைவூட்டக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் சவூதி இளவரசரும் பயன்படுத்தி வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யதார்த்தத்தில் இந்த விடயம் தொடர்பாக சவூதி மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளவது முடியாத காரியமாகும். முடிக்குரிய இளவரசரின் கருத்துக்களுக்கு முரணான கருத்துக்களை கொண்டவர்கள் அங்கே நடத்தப்பட்டு வருகின்ற விதமே இதற்கு பிரதான காரணம். அந்த வகையில் பிடனின் றியாத் விஜயம் ஒரு முக்கியமான அடையாளச் சைகையாக அமையலாம். அவருக்கு வழங்கப்படும் அதிக எண்ணெய்க்கு ஈடாக பிளவு பட்டுள்ள அரச குடும்பத்தில் தனது சொந்த எதிர்காலத்துக்கான ஊகங்களுக்கு பிடன் முடிவு கட்ட வேண்டும் என்பதே முடிக்குரிய இளவரசின் எதிர்ப்பார்ப்பும் விருப்பமும் ஆகும்.

இராணுவ ரீதியாகக் கூட அமெரிக்கா இல்லாவிட்டால் முடிக்குரிய இளவரசர் மிகவும் பலவீனமானவரே. வரலாற்று ரீதியாக சவூதி அரேபியாவுடன் நீண்டகால பாதுகாப்பு உடன்படிக்கைகளுக்குப் பதிலாக தற்காலிகத் தேவைகளுக்கான அவசர உதவிகளையே அமெரிக்கா வழங்கி வந்துள்ளது.